பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 07 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நீட் தேர்வு தொடர்பாக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய கல்வி அமைச்சா திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
2. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்க கஜகஸ்தான் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் உறுப்பு நாடுகளின் அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.
3. அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 16 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
4. பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது.
5. விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நீட் தேர்வு தொடர்பாக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய கல்வி அமைச்சா திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பொய்யான தகவல்களைக் கூறி மக்களை குழப்பம் பணியில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம்சாட்டியுள்ளார்.

இளநிலை நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு தர்மேநிர பிரதான் உறுதியளித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்க கஜகஸ்தான் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் உறுப்பு நாடுகளின் அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

அஸ்தானாவில் ரஷ்யா, கஜகஸ்தான், பெலாரஸ், உஸ்பெக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த சந்திப்புகளின் போது இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்களுடன் பேச்சு நடத்தியதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐ நா பொதுச்செயலளர் திரு ஆண்டனியோ குடாரஸைவும், திரு ஜெய்சங்கள் சந்தித்து பேசினார்.

இதனிடையே அஸ்தானாவில் இன்று நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ஆண்டு உச்சி மாநாட்டில் திரு ஜெய்சங்கர் உரையாற்றுகிறார்.

**[]<<<>>>[]**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள மேல்முறையீடுகள் பெருமளவில் குறைந்து வருவதாக மத்திய பணியாளர் நலன் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்புத் துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய தகவல் ஆணையத்தின் உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டில் 35 ஆயிரம் மேல்முறையீடுகள் நிலுவையில் இருந்ததாக கூறினார்.

இது நடப்பு ஆண்டில் 22 ஆயிரத்து 666 ஆகக் குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் ஆணையத்தின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பின் காரணமாக மக்களுக்கு தகவல்களை வழங்குவது எளிதாக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

[]<<<>>>[]

முன்னாள் துணைப் பிரதமரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு எல் கே அத்வானி உடல் நலக்குறைவு காரணமாக தில்லி அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும், மருத்துவர்களின் கண்காணிப்பில் அவர் இருப்பதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வயது மூப்பு தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த வாரம், தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினார்.

[]<<<>>>[]

ஜார்க்கண்ட் முதலமைச்சராக திரு ஹேமந்த் சோரன் மீண்டும் வரும் ஏழாம் தேதி பதவியேற்கிறார்.

திரு சம்பை சோரன் நேற்று தமது முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்ததை அடுத்து, திரு ஹேமந்த் சோரன் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 16 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்மாநிலத்தில் வெள்ளம் காரணமாக நேற்று மேலும் எட்டு பேர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் இரண்டாயிரத்து 800 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 39 ஆயிரத்து 400 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடனும் வெள்ள நிலைமை குறித்து காணொலி மூலம் ஆலோசனை நடத்தினார்.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.,

கம்ரூப் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல இடங்களை அவர் நேரில் பார்வையிட்டார்.

இதேபோல் திப்ருகரில் வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவாலும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனிடையே புகழ்பெற்ற காசிரங்கா தேசிய பூங்காவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரம்மபுத்திரா, பராக் மற்றும் அவற்றின் துணை நதிகளில் அபாய அளவுக்கு மேல் தண்ணீர் ஓடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அஸ்ஸாம் அரசு 181 நிவாரண முகாம்களைத் திறந்துள்ளது.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

பிரிட்டனில் நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான இந்தத் தேர்தலில் அந்நாட்டு நாடாளுமன்றத்தின் 650 இடங்களுக்குத் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்திய நேரப்படி பிற்பகல் மணி 12-30-க்கு தொடங்கும் வாக்குப்பதிவு நள்ளிரவு மணி 3-30 வரை நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பிறகு அங்கு நடைபெறும் முதல் பொதுத் தேர்தல் இதுவாகும்.

[]<<<>>>[]

இந்தியா – இலங்கை இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு அதிக பயன் அளிப்பதாக உள்ளது என்று அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், அடுத்து மேற்கொள்ளப்பட இருக்கும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தற்போதுள்ள ஒப்பந்தத்தை மேலும் வலுப்படுத்தும் என்று கூறினார்.

[]<<<>>>[]

இந்த ஆண்டு ரபி சந்தைப்பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து 266 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம் 22 லட்சம் கோதுமை விவசாயிகள் பயன் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் குறைந்த பட்ச ஆதரவு விலையில் நெல் மற்றும் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம் ஒரு கோடியே 29 லட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளதாகவும், அவர்களது வங்கிக் கணக்குகளில் இரண்டு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய உணவுக் கழகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

நாடு முழுவதும் முன்னேறி வரும் மாவட்டங்களில் மக்கள் நலன் தொடர்பான இலக்குகளை எட்டும் நோக்கில் நித்தி ஆயோக் சம்பூர்ணதா அபியான் என்ற இயக்கத்தை இன்று தொடங்குகிறது.

தமிழகத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த இயக்கம் தொடங்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் ரவிச்சந்திரன் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) ---50 செகண்ட்*

[]<<<>>>[]

பணியின்போது உயிரிழந்த அக்னிவீரர் அஜய் குமாருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக ராணுவம் விளக்கம் அளித்துள்ளது.

அக்னிவீர் அஜய் குடும்பத்திற்கு ஏற்கனவே 98 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகத்தில் ராணுவம் தெரிவித்துள்ளது.

அக்னிவீர் திட்டத்தின் விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய மேலும் 67 லட்சம் ரூபாயும் அவரது குடும்பத்தினருக்கு விரைவில் வழங்கப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

அக்னிவீரர் அஜய் குமாரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை என தவறான தகவல்கள் பரப்பப்பட்டதை அடுத்து ராணுவம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

நேபாளத்தில் சி பி என் – யு எம் எல் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பதவி விலகி உள்ளனர்.

திரு பிரசண்டா தலைமையிலான சிபிஎன் மாவோ கட்சி அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாகவும், சிபிஎன் – யுஎம்எல் அறிவித்துள்ளது.

நேபாள காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து அக்கட்சி புதிய அரசை அமைக்க முடிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதையடுத்து திரு பிரசண்டா தலைமையிலான அரசு நீடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

லண்டனில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை நெதர்லாந்தின் **Sandar Arends** **-** ராபின் ஹாஸ் இணையை 7-5, 6-4 என்ற செட் கணக்கில் வென்றது.

**[]<<<>>>[]**

டுவெண்டி –டுவெண்டி கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணி இன்று அதிகாலை தில்லி திரும்பியது.

விமான நிலையத்தில் அவர்களுக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வெஸ்ட் இண்டீஸின் பார்படாஸில் ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக இந்திய வீரர்கள் நாடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது,

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடி சந்திக்கவுள்ளனர்.

பின்னர் மும்பையில் இன்று மாலை நடைபெறும் வெற்றி விழா பேரணியிலும் அவர்கள் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

கனடா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆட்வர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், டென்மார்க்சின் **Gemke-**யை 17-21, 21-16,21-14 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

இங்கிலாந்துக்கு எதிரான காது கேளாதோர் கிரிக்கெட் தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு நேற்று புதுதில்லியில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் பங்கேற்று வீரர்களை கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய காது கேளாதோர் கிரிக்கெட் அணி நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த அணியினரின் மன உறுதியே இந்த வெற்றிக்குக் காரணம் என்று அவர் கூறினார்.

இங்கிலாந்தில் கடந்த மாதம் 18-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெற்ற டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் ஐந்து - இரண்டு என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

***End of News***